# துபாயிலுள்ள கட்டுமான நிறுவனத்திற்கு கொத்தனார், தச்சர், ஆபரேட்டர்கள் தேவை

சென்னை, அக்.9–

துபாயிலுள்ள கட்டுமான நிறுவனத்திற்கு 2 வருட பணி அனுபவத்துடன் 27 முதல் 45 வயது வரையுள்ள கொத்தனார்கள், ஆப்ரேட்டர்கள், தச்சர்கள் மற்றும் போர்மென்கள் தேவைப்படுகிறார்கள். வேலை சம்மந்தப்பட்ட விவரங்கள் இந்நிறுவன வலைதளத்தில் www.omcmanpower.com அறிந்து கொள்ளலாம்.

கொத்தனார், ஆப்ரேட்டர் மற்றும் தச்சர்களுக்கு மாத ஊதியம் ரூ. 23,000 மற்றும் மிகை நேர பணி ஊதியமும், போர்மென்களுக்கு மாத ஊதியம் ரூ.38,000 வழங்கப்படும்.

தேர்ந்தேடுக்கப்படுபவர்களுக்கு அனுபவத்தின் அடிப்படையில் கூடுதல் ஊதியம், இலவச இருப்பிடம் மற்றும் அந்நாட்டின் சட்டதிட்டத்திற்கு உட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

கொத்தனார், ஆப்ரேட்டர் மற்றும் தச்சர்கள் பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது இ.சி.என்.ஆர். பாஸ்போர்ட் வைத்திருத்தல் வேண்டும். போர்மென் வேலைக்கு டிப்ளோமோ தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

உரிய தகுதி மற்றும் விருப்பமிருப்பின், தங்களின் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணபத்துடன் கல்வி, அனுபவம், செல்லத்தக்க பாஸ்போர்ட் மற்றும் 2 புகைப்படத்துடன், தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 14.10.2018 அன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் முதற்கட்ட நேர்காணலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு 22505886, 22502267, 8220634389, 9566239685 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவர அமைச்சத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண். RC No. B0821/CHENNAI/CORPN/1000+/5/308/84ஆகும்.

# மோட்டார்சைக்கிள் கவிழ்ந்து 2 கல்லூரி மாணவர்கள் பலி

காஞ்சீபுரம், அக். 9–

காஞ்சீபுரம் அருகே அதிவேகமாக வந்த மோட்டார்சைக்கிள் கவிழ்ந்ததில் 2 கல்லூரி மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் பகுதியில் வசிப்பவர் உஜ்வால் கோயங்கா (20). இவரது நண்பர் பீகார் மாநிலம் பாட்னா பகுதியை சேர்ந்த ஆதித்யாசேகர் (20). இவர்கள் இருவரும் வேலூர் மாவட்டத்தில் உள்ள விஐடி கல்லூரியில் பிஇ சிவில் மூன்றாம் ஆண்டு படித்து வருகின்றனர்.

நேற்று இவர்கள் இருவரும் மோட்டார்சைக்கிளில் வேலூரில் இருந்து சென்னைக்கு சென்றனர். பிறகு அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் வேலூருக்கு சென்று கொண்டிருந்தனர்.

காஞ்சீபுரம் அருகே சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலை கீழம்பி ஜங்சன் என்ற இடத்தில் அதிவேகமாக வந்த மோட்டார்சைக்கிள் திடீரென கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்தது. இதில் கல்லூரி மாணவர்கள் உஜ்வால்கோயங்கா, ஆதித்யாசேகர் இருவரும் தூக்கி எறியப்பட்டு படுகாயம் அடைந்தனர். மோட்டார்சைக்கிள் நொறுங்கியது. உடனடியாக உஜ்வால் கோயங்காவை 108 ஆம்புலன்ஸ் மூலம் காஞ்சீபுரம் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு டாக்டர்கள் சிகிச்சை பலனின்றி அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

மேலும் ஆதித்யாசேகரை வேலூர் சிஎம்சி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு டாக்டர்கள் அவரை பரிசோதித்தனர். அப்போது ஆதித்யாசேகர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுதொடர்பாக, காஞ்சீபுரம் நகர துணை போலீஸ் சூப்பிரண்டு எம். பாலசுப்பிரமணியன்மேற்பார்வையில், பாலுச்செட்டிசத்திரம் இன்ஸ்பெக்டர் எஸ்.பிரபாகர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினார்.




புலிகள் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது

# 5வது புலிகள் காப்பகம் அமைக்க நடவடிக்கை: திண்டுக்கல் சீனிவாசன் அறிவிப்பு

## ரூ.21 கோடியில் வண்டலூர் உட்பட வன உயிரியல் பூங்காக்களில் மேம்பாட்டு பணிகள்

சென்னை, அக்.9–

**புலிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் 5வது புலிகள் காப்பகம் அமைக்கப்படும் என்று வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் கூறினார்.**

**வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா உட்பட பல்வேறு வன உயிரியல் பூங்காக்களில் 21 கோடி ரூபாய் செலவில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.**

தமிழக வனத்துறை சார்பில் கொண்டாடப்பட்ட மாநில அளவிலான வன உயிரின வாரத்தின் நிறைவு விழா சென்னையை அடுத்த நன்மங்கலத்தில் உள்ள தமிழ்நாடு உயிரிப்பன்மை பாதுகாப்பு, பசுமையாக்கல் திட்ட அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

வன உயிரினங்கள் குறித்து மாணவர்களுக்கு பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டி, வினாடி வினா போட்டிகள் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தமிழக வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சி. சீனிவாசன் பரிசுகள் வழங்கி பாராட்டி பேசினார்.

அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் பேசியதாவது:–

வன உயிரினங்களை போற்றி பாதுகாப்பது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நாடு முழுவதும் மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் 2ம் நாள் முதல் ஒரு வார காலத்திற்கு வன உயிரின வார விழா கொண்டாடப்படுகிறது.

அம்மா, "மரங்களை மக்கள் வளர்த்தால் மக்களை மரங்கள் வளர்க்கும்" என்ற உயரிய நோக்கோடு பல்வேறு திட்டங்களை தமிழகத்தில் செயலாக்கம் செய்ய வழிகாட்டினார். அவரின் வழிகாட்டுதலின்படி எடப்பாடி அரசு, இந்தியாவிலுள்ள 17,972 இன பூக்கும் தாவரங்களில் 5,640 வகை பூக்கும் தாவர இனங்கள், 165 தெளிந்த நீரில் வாழும் மீன் இனங்கள், 76 நீர் நிலவாழ் உயிரினங்கள், 177 ஊர்வன வகைகள், 454 பறவையினங்கள் மற்றும் 187 பாலூட்டி வகைகளை கண்டறிந்து அவற்றின்உயிரியல்மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

அம்மா, வனம் மற்றும் வன உயிரினங்கள் மேம்பாட்டிற்கு பல்வேறு சீரிய திட்டங்களை அறிவித்ததோடு, அழிந்துவரும் விலங்குகள் மற்றும் அவைகளின் வாழ்விடத்தை மீட்பது குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ள "உயர்நிலை வன உயிரினப் பாதுகாப்பு நிறுவனம்" ஒன்று வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் அமைக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்து, 15.3.2013 அன்று அம்மாவினால் அடிக்கல் நாட்டப்பட்டது. அம்மாவின் அரசை வழிநடத்தும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியால் ரூ.27.18 கோடி நிதி செலவில் 12.10.2017 அன்று இந்த நிறுவனம் திறந்து வைக்கப்பட்டது.

### முன்னோடி மாநிலம்

இந்தியாவிலேயே வனப்பரப்பு அடர்த்தியினை அதிகரித்தல், ஈரநிலங்களை பாதுகாத்தல், நிலத்தடி நீர், ஆறுகள் மற்றும் இதர நீர்நிலைகளை பாதுகாத்தல், கடலோர பகுதிகள், வலுவிழந்த சூழலியல் மண்டலங்களை பாதுகாத்தல் போன்ற பாதுகாப்பு மற்றும் மேலாண்மைப் பணிகளில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

மனித நலனுக்காக வனம் மற்றும் வன உயிரினங்களை நிலைத்த தன்மையுடன் பாதுகாத்து பராமரிக்க அம்மாவின் அரசு

1. அம்மாவின் பிறந்த நாளில் மாபெரும் மரம் நடவு திட்டம்.
2. புலிகள் பாதுகாப்பு திட்டம்.
3. யானைகள் பாதுகாப்பு திட்டம்.
4. தேசியகாடு வளர்ப்புத் திட்டம்.
5. வனப்பகுதிகளில் தீத்தடுப்புத் திட்டம்.
6. வேட்டைத் தடுப்புத் திட்டம்.
7. வனங்களுக்கு வெளியே மரபரப்பினை அதிகரிக்கும் திட்டம்.

போன்ற திட்டங்கள் சீரோடும் சிறப்போடும் செயலாக்கம் செய்து வருகிறது.

இது மட்டுமன்றி

★ வன உயிரினங்களுக்கு தேவைப்படும் மருத்துவ உதவிகளை செய்ய ஈரோடு, கிருஷ்ணகிரி மற்றும் திருநெல்வேலியில் வனக் கால்நடை மையங்கள்,

### புலிகள் நடமாட்டம் கண்காணிப்பு

★ தேசிய புலிகள் காப்பக ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, அடர்ந்த வனத்திற்குள்ளே கண்காணிப்பு கேமரா மூலமும், கூகுள் வரைபடம் மற்றும் ஜி.பி.ஆர்.எஸ். என்னும் புதிய தொழில்நுட்பத்தினைக் கொண்டு புலிகள், சிறுத்தைகள் மற்றும் இதர வன உயிரினங்களின் நடமாட்டம் மற்றும் அதன் காலடித் தடங்களை வைத்து கண்காணித்தல்,

★ ஆனைமலை, களக்காடு முண்டந்துறை, முதுமலை மற்று சத்தியமங்கலம் புலிகள் காப்பகப் பகுதிகளில் ரூ.18 கோடிக்கு மேம்பாட்டுப் பணிகள் என வனத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பல்வேறு திட்டங்கள் செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

★ மேலும், எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு உயிரியல் பூங்கா ஆணையத்தின் 20வது ஆட்சிமன்றக் குழு கூட்டத்தில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர், கிண்டி சிறுவர் பூங்கா, அமிர்தி பூங்கா, வேலூர், குரும்பபட்டி பூங்கா, சேலம் ஆகியவற்றில் ரூ. 21 கோடியில் பல்வேறு மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழக வனத்துறை இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அனைத்து மாநிலங்களுக்கிடையே இரண்டாவது இடத்தில் உள்ளது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. பள்ளிக்கரணை சதுப்பு நில மேம்பாட்டு பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### புலிகள் எண்ணிக்கை உயர்வு

தமிழகத்தில் நான்கு புலிகள் காப்பகம்தற்போது உள்ளன. புலிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருவதால் ஐந்தாவது புலிகள் காப்பகம் அமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தமிழக வனத்துறையின் திட்டங்கள், பணிகள், நிகழ்ச்சிகள் மக்களின் முழு பங்களிப்புடன் நடத்தப்படும்.

நம் நாட்டில் உள்ள வனச் செல்வங்களையும், வன உயிரினங்களையும் பாதுகாக்கும் பணியில் சிறந்த போர் வீரர்களைப்போல் நாம் செயலாற்ற வேண்டுவதோடு வன உயிரினங்களின் நல்வாழ்வு, இயற்கை வளத்திற்கும், சுற்றுச் சூழல் நலத்திற்கும் ஆதாரம் என்பதால் "வன உயிரின வார நிறைவு விழாவான இந்நன்நாளில் வன உயிரின பாதுகாப்பிற்கு என்றும் உறுதுணையாக இருப்போம், நம்மால் வன உயிரினங்களுக்கு எந்த விதமான பாதிப்பும் வரக்கூடாது என்ற உறுதியை அனைவரும் ஏற்போம்.

இவ்வாறு அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் ஹ.மல்லேசப்பா, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மை செயலர் ஷம்பு கல்லோலிகர், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக்காப்பாளர் த.பு. ரகுநாத், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ. ஜெயவர்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், காஞ்சிபுரம் கிழக்கு மாவட்ட செயலாளருமான சிட்லபாக்கம் ச.ராசேந்திரன், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய துணைத் தலைவர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம், பரங்கிமலை முன்னாள் ஒன்றிய தலைவர் என்.சி. கிருஷ்ணன், மாவட்ட கழக துணை செயலாளர் அம்மன் பி. வைரமுத்து, செம்பாக்கம் முன்னாள் நகரமன்ற தலைவர் ஜி.எம்.சாந்தகுமார், நன்மங்கலம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சு. செல்வராணி சுந்தர், மேடவாக்கம் எம்.ஜி.சக்திவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

3 சிறப்பு முகாம்களில்

# வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க 8½ லட்சம் பேர் விண்ணப்பம்

சென்னை, அக்.9

'இதுவரை நடந்த 3 சிறப்பு முகாம்களில் வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க 8 லட்சத்து 62 ஆயிரம் பேர் விண்ணப்பித்து உள்ளனர்' என்று தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ கூறினார்.

தமிழ்நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்க்க, நீக்க மற்றும் திருத்தம் செய்வதற்கு 3 சிறப்பு முகாம்கள் இதுவரை நடந்து உள்ளன.

இந்த முகாம்களில் விண்ணப்பம் செய்தவர்கள் பற்றிய விவரம் தொடர்பாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

தமிழகம் முழுவதும் வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த மாதம் 1ந் தேதி வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் 1ந்தேதியில் இருந்து வரும் 31ந் தேதி தேதி வரை வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்து கொள்ள கால அவகாசம் வழங்கப்பட்டது.

இதற்காக தேர்தல் ஆணையம் சார்பில் கடந்த மாதம் 9ந் தேதி மற்றும் 23ந் தேதி, கடந்த 7ந் தேதி ஆகிய நாட்களில் 3 சிறப்பு முகாம்கள் அந்தந்த வாக்குச்சாவடிகளில் நடத்தப்பட்டன.

கடந்த 3 சிறப்பு முகாம்கள் மூலம் வரைவு வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொண்டவர்களின் விவரங்கள் தெரியவந்துள்ளது.

அதன்படி தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க (விண்ணப்பம்–6) 8 லட்சத்து 62 ஆயிரத்து 373 பேர் விண்ணப்பித்துள்ளனர். அதிகபட்சமாக காஞ்சீபுரம் மாவட்டத்தில் 57 ஆயிரத்து 972 பேரும், குறைந்தபட்சமாக நீலகிரி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 400 பேரும் விண்ணப்பித்துள்ளனர்.



பெயர் நீக்கம் செய்ய (விண்ணப்பம்–7) 77 ஆயிரத்து 879 பேரும், வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள (விண்ணப்பம்–8) 1 லட்சத்து 7 ஆயிரத்து 4 ஆயிரத்து 418 பேரும், முகவரி மாற்றம் செய்ய (விண்ணப்பம்–8) 77 ஆயிரத்து 40 பேர் என மொத்தம் 11 லட்சத்து 24 ஆயிரத்து 710 பேர் நேற்று வரை விண்ணப்பித்துள்ளனர்.

வெளிநாடுகளில் வசிப்பவர்கள் எவரும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கவில்லை.

### 14–ந்தேதி முகாம்

மீண்டும் வரும் 14ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) அன்று இறுதி சிறப்பு முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முகாமுக்குப் பிறகும், தொடர்ந்து வரும் 31ந் தேதி வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள கால அவகாசம் உள்ளது. மாநகராட்சி மண்டல அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றில் வேலை நாள்களில் மனுக்களை அளிக்கலாம்.

இது தவிர தேர்தல் துறை இணையதளத்தில் (www.tnelection.gov.in) ஆன்லைன் மூலமும் திருத்தம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனை, பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

# தொழில் முனைவோர்களுக்கு 16–ந்தேதி மின்னணு ரசீது முறை குறித்த பயிற்சி

## தமிழக அரசு ஏற்பாடு

சென்னை, அக்.9–

தொழில் முனைவோர்களுக்கு 16–ந்தேதி மின்னணு ரசீது முறை குறித்து பயிற்சியை தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் நடத்துகிறது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: –தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், (www.editn.in) (தமிழ்நாடு அரசின் தன்னாட்சி நிறுவனம்) சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு 2013 –2014ம் ஆண்டில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்நிறுவனமேம்பாட்டுத்திட்டம் அறிவித்தது. இத்திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 3891 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர். மேலும் பிரதமரின் சுய வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகியவற்றின் வாயிலாகவும் பல்லாயிரம் தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. தற்பொழுது தொழில் நடத்திக்கொண்டிருக்கும் தொழில் முனைவோர்களுக்காக, "பொருட்கள் சேவை மற்றும் வரி மற்றும் மின் வழிச் சீட்டு" (மின்னணு ரசீது) குறித்து ஒரு நாள் பயிற்சி, வரும் 16.10.2018 அன்று காலை 10 மணி முதல் 5 மணி வரை தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், கிண்டி சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 600 032 என்ற விலாசத்தில் நடைபெற உள்ளது.

### டேலி நிதி மேலாண்மை கருவிகள் பயிற்சி

இதேபோல தொழில்முனைவோர்களுக்காக, "அடிப்படை கணக்குகள் மற்றும் டேலி (Tally) நிதி மேலாண்மை கருவிகள் குறித்து அரைநாள் பயிற்சி", தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் வரும் 23–ந் தேதி அன்று காலை 10 மணி முதல் 1 மணி வரை நடைபெற உள்ளதால், தொழில் செய்து வரும் தொழில் முனைவோர்கள், வருகை தந்து பயன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இப்பயிற்சியில் சேர விரும்புவோர் தங்கள் பெயரை தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் நேரிலோ அல்லது www.editn.in இணையதளம் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், கிண்டி சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 600 032 என்று முகவரியிலும், தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள். 044 22252081 / 22252082/ 8668102600 தொடர்பு கொள்ளலாம்.

பருவ நிலை மாற்றத்தால்

# இந்தியாவில் வெப்பம் அதிகரிக்கும்; பஞ்சம் ஏற்படும், மக்கள் இடம் பெயர்வார்கள்

புதுடெல்லி, அக்.9

பருவ நிலை மாற்றத்தால் எதிர்வரும் ஆண்டுகளில் இந்தியாவை வெப்பம் கடுமையாக தாக்கும் என்று ஐ.நா. எச்சரித்து உள்ளது.

தொழிற்சாலைகள் மற்றும் பொருட்களை எரிப்பதில் இருந்து வெளியேறும் கார்பன் காரணமாக பூமியின் மேற்பரப்பில் உள்ள ஓசோன் மண்டலம் பாதிக்கப்பட்டு அதிக சூரிய ஒளி பூமியில் விழுகிறது. இதனால் பூமியை வெப்பம் அடைந்து பருவ நிலையில் மாற்றத்தை உருவாக்கி பல்வேறு மோசமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. கடந்த 2015ம் ஆண்டு வட இந்தியாவில் வெப்பத் தாக்குதலால் 2500க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்தனர்.

இதே மாதிரியான வெப்பத்தாக்குதல் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் எதிர் வரும் ஆண்டுகளில் ஏற்படலாம் என்று ஐ.நா.வின் ஆய்வு அறிக்கை எச்சரித்துள்ளது. அண்மையில்

## ஐ.நா.எச்சரிக்கை

நாடுகளுக்கு இடையேயான பருவநிலை மாற்றம் தொடர்பான குழு தனது அறிக்கையை ஐ.நா.வில் தாக்கல் செய்தது.

அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ 2030ம் ஆண்டுக்கு முன்பாகவே பூமியின் வெப்ப நிலை 1.5 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கும். எதிர்வரும் ஆண்டுகளில் இந்தியாவில் வெப்பத்தாக்குதல் கடுமையாக இருக்கும்.

★ பூமியின் வெப்பநிலை 2 டிகிரி செல்சியசாக உயரும்போது, இந்தியாவும், பாகிஸ்தானும் வெப்ப அலைகளால் பெரும் பாதிப்பை சந்திக்கும்.

★ 2050ம் ஆண்டு மக்கள் தொகையில் 35 கோடிக்கும் மேற்பட்டோர் வெப்பம் மற்றும் மலேரியா, டெங்கு காய்ச்சல் போன்ற தாக்குதலுக்கு ஆளாவார்கள்.

★ பருவநிலை மாற்றம் காரணமாக பஞ்சம் ஏற்பட்டு உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கும். வறட்சியால் மக்கள் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு அதிக அளவில் இடம் பெயருவதும் நிகழும்.

★ பூமியில் ஒரு டிகிரி செல்சியஸ் (1.8 டிகிரி பாரன்ஹீட்) அதிகரித்தாலே கடலின் நீர் மட்டம் உயரும். இதனால் பயங்கர புயல்கள், வெள்ளம், வறட்சி ஏற்படும்.

★ பூமியின் வெப்ப நிலை 1.5 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகரிக்காமல் இருக்க கார்பன் வெளியேற்றத்தை 50 சதவீதம் வரை கட்டுப்படுத்தவேண்டியது அவசியம்.

வருகிற டிசம்பர் மாதம் போலந்து நாட்டின் கடோவிஸ் நகரில் நடைபெற இருக்கும் ஐ.நா. பருவநிலை குறித்த மாநாட்டில் பூமியில் வெப்ப நிலை அதிகரித்து வருவது குறித்து விரிவாக விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### திருத்தம்

மக்கள் 06.10.2018 மற்றும் 08.10.2018 ஆகிய தேதிகளில் வெளியான Sri Ramdev அடகு வணிகர் ஏல அறிவிப்பு விளம்பரத்தில் ஏலத்தேதி 17.10.2018 அன்று மாலை 3 மணி என்று இருப்பதை மாலை 2 மணி என்று திருத்தி வாசிக்கவும்.

**சிகால் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம் : எண்.73, ஆர்மீனியன் தெரு, சென்னை-600 001.
Tel : 044-66157071 / Fax : 044-66157017
CIN: L51909TN1955PLC002431
Website: www.sical.com e-mail: secl@sical.com

**அறிவிப்பு**

இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிபடுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள், 2015ன் கட்டுப்பாடு 33 மற்றும் 47[1][a]ன் படி இதனால் அறிவிக்கப்படுவது என்னவெனில் 30 செப்டம்பர் 2018 அன்று முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கைகள் திங்கட்கிழமை 05 நவம்பர்,2018 அன்று காபி டேஸ்கொயர், 23/2 விட்டல் மல்லையா ரோடு, பெங்களூரு-560 001ல் இயக்குநர் குழுமத்தால் ஒப்புதலுக்காக எடுத்துக் கொள்ளப்படும். மேலும், உள்வர்த்தக கட்டுப்பாடுகள் தடை நடத்தை குறியீட்டின்படி நிறுவனத்தின் பங்கு பரிவர்த்தனை சாளரம் 26 அக்டோபர், 2018 முதல் 07 நவம்பர், 2018 வரை மூடப்பட்டிருக்கும். இந்த அறிவிப்பு நேஷனல்/மும்பை ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் இணையதளம் (www.nseindia.com)/ (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் (www.sical.com/ investors/ financial results) இணையதளத்திலும் காணலாம்.

சிகால் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட்டுக்காக
வ.ராதாகிருஷ்ணன்
இடம் : சென்னை கம்பெனி செயலர்
தேதி : 09.10.2018

PARRYS murugappa
**ஈ.ஐ.டி. - பாரி (இந்தியா) லிமிடெட்**
CIN: L24211TN1975PLC006989
பதிவு அலுவலகம்: 'டேர் ஹவுஸ்' பாரீஸ் கார்னர், சென்னை - 600 001.
Tel: 044 – 2530 6789, Fax: 044 – 2534 1609,
வலைதளம்: www.eidparry.com,
மின்னஞ்சல்: investorservices@parry.murugappa.com,

**அறிவிப்பு**

SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள், 2015, நிபந்தனைகள் 29 மற்றும் 47ன் படியும் மற்றும் இதர நிபந்தனைகளின் படியும் செப்டம்பர் 30, 2018 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலிப்பதற்காக, இந்நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு கூட்டம் நவம்பர் 9, 2018 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும். மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் www.eidparry.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனங்களின் www.bseindia.com மற்றும் www.nseindia.com என்ற இணைய தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப் படுகிறது.

ஈ.ஐ.டி. - பாரி (இந்தியா) லிமிடெட்க்காக
இடம்: சென்னை G. ஜலஜா
நாள்: அக்டோபர் 8, 2018 நிறுவன செயலாளர்

**ஈசாப் இந்தியா லிமிடெட்** ESAB
CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100
இ-மெயில்: investor.relations@esab.co.in

**அறிவிப்பு**

SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள், 2015, நிபந்தனை 47 மற்றும் நிபந்தனை 29ன் படி செப்டம்பர் 30, 2018 அன்று முடிவடைந்த காலண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிப்பதற்கு கம்பெனியின் இயக்குனர் குழுக் கூட்டம் அக்டோபர் 30, 2018 செவ்வாய்கிழமை அன்று பதிவு அலுவலகத்தில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் www.esabindia.com என்ற இணைய தளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனங்களின் www.bseindia.com மற்றும் www.nseindia.com என்ற இணையதளங்களிலும் வெளியிடப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இயக்குனர் குழுவின் சார்பாக
சென்னை S. வெங்கடகிருஷ்ணன்
9 அக்டோபர், 2018 நிறுவன செயலாளர்

சென்னை உயர்நீதிமன்றம்
(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)
முதலேற்பு மனு எண் 733/2018

இந்திய வாரிசு உரிமைச் சட்டம்,XXXIX/1925 தொடர்பான மனுவில் 2.09.2010 அன்று இறந்து போன சுரேந்தர் குமார் சோமணி @ S.K.சோமணி அவர்களின் சொத்துக்கள் தொடர்பான வாரிசு உரிமை கோரும் மனு.

1. ஹேம்லதா சோமணி, (வயது 78)
க/பெ. லேட் சுரேந்தர்குமார் சோமணி
@ S.K.சோமணி, எண் 8, கோரல் பே 4வது சீவார்டு சாலை
வால்மிகி நகர், திருவான்மியூர், சென்னை -600041

2. பிரதீப் குமார் சோமணி (வயது 58)
த/பெ. லேட் சுரேந்தர் குமார் சோமணி @
S.K.சோமணி, எண் 8, கோரல் பே 4வது சீவார்டு சாலை
வால்மிகி நகர், திருவான்மியூர், சென்னை -600041

3. சந்தீப் குமார் சோமணி, (வயது 51)
த/பெ. லேட் சுரேந்தர் குமார் சோமாணி @
S.K.சோமணி, கிஜோஸ் ஆப்பஸ், பிளாட் 46
எண் 122 கீரின்வேஸ்சாலை, R.A.புரம்
இராஜா அண்ணாமலை புரம், சென்னை- 600028

4. சஞ்சீவ் குமார் சோமணி (வயது 50)
த/பெ. லேட் சுரேந்தர் குமார் சோமணி
தெற்கு 202 ஜபரி விஸ்லிங் கோர்ட்
சர்வே எண் 60-63, செர்லிங்கம்பள்ளி
சைப்ராபேர்டு கமிஷனர் அலுவலகம் பின்புறம்
கொச்சிபேலி, தெலுங்கானா - 500032 ........ மனு தாரர்கள்

சென்னை-600018, ஸ்ரீமான் சீனிவாஸ் சாலை, எண். 1-ல் வசித்து வந்தவர் 2010 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 2ஆம் தேதி இறந்து போனவருமான திரு சுரேந்தர் குமார் சோமாணி @ S.K சோமாணி, அவர்களின் பங்குப் பத்திரங்களில் ஏதேனும் பாத்தியதை கோருகிற அனைவரும் தங்களுக்கு தக்கதெனக் கருதினால், நீதிமன்ற வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்பு சென்னை நீதிமன்றம் மாஸ்டர் கோர்ட்டில் 30.10.2018 அன்று காலை 10.30 மணக்கு நடவடிக்கைகளைப் பார்த்து தங்களது ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2018-ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி சென்னையில் சையொப்பமிட்டது.

(K.கன்னியப்பன், M.A.M.L.BLIS)
உதவி பதிவாளர்
முதலேற்பு பிரிவு-I
உயர்நீதிமன்றம், சென்னை.

J.பச்சையப்பன, P.கவிதா,
P.சரவணன், C-D மோதி
N. கலைநேசன், வழக்கறிஞர்கள்,
எண்261 புதிய கூடுதல் சட்ட அறைகள்
சென்னை உயர்நீதிமன்றம், சென்னை - 600104